மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது

(இ) மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத்துறை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை—என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,14,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் பக்கத்து மாநிலமான பாண்டி-காரைக்காலில் இருந்து மது வகைகளை கொண்டு வந்து வியாபாரம் செய்யப்படுவதைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2 —மாநில ஆயத் தீர்வைத் துறை—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,14,82,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் முழுமையான மதுவிலக்கு நடைமுறைப் படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,14,82,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."